செ.வெ.எண். 66 நாள். 25.04.2017

**தமிழ்நாடு அரசு**

**(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை)**

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**

**மாவட்ட இயக்க மேலாண்மை அலகு மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் திருநெல்வேலி**

# வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தனியார் நிறுவன வேலைவாய்ப்பு முகாம்

**(தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு)**

திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் 2016–17–ஆம் ஆண்டிற்கு, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் ஊரக இளையோர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் வட்டார அளவில் முகாம் நடத்தி அதன் மூலம் தகுதியான அளவில் ஊதியம் கிடைத்திட வழி நடத்திடும் பொருட்டு, DDU-GKY திட்டத்தின் கீழ் 2016–17–ம் ஆண்டில் கீழப்பாவூர் மற்றும் ஆலங்குளம் வட்டாரங்களை உள்ளடக்கி வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட உள்ளது. அதன்படி **29.04.2017** அன்று பாவூர்சத்திரம், ஷாலோம் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் வைத்து மேற்படி முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமில் 25க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் நிறுவனங்கள், தங்கள் நிறுவனத்தில் பணிபுரிவதற்கு தேவையானவர்களைத் தெரிவு செய்ய உள்ளனர். 5ம் வகுப்பு முதல் பட்டபடிப்பு வரை படித்த, ITI, Diploma பயிற்சி பெற்ற மற்றும் பெறாத 18 முதல் 40 வயதுக்குட்பட்ட கீழப்பாவூர் மற்றும் ஆலங்குளம் பகுதி மற்றும் மாவட்டத்தில் பிறபகுதிகளைச் சார்ந்த ஆண்/பெண் இருபாலரும் இம்முகாமில் பங்கேற்கலாம்.

விருப்பமுள்ள நபர்கள் 29.04.2017 (சனிக்கிழமை) காலை **09.30** மணிக்கு பாவூர்சத்திரம், ஷாலோம் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் விண்ணப்பப் படிவத்தினை நேரடியாகப் பெற்று தங்கள் விபரங்களைப் பதிவு செய்து வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளலாம். மேலும், அனைவரும் தங்களது கல்விசான்று மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றின் அசல் மற்றும் நகல் உள்ளிட்ட இதர சான்றுகளுடன் பங்கேற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

**தொடர்புக்கு**

| | |
|---|---|
| **தமிழ்நாடு மகளிர் நலமேம்பாட்டு நிறுவனம்**<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>(காவல் ஆணையர் அலுவலக பழைய கட்டிடம், முதல்தளம்),<br>திருநெல்வேலி தொலைபேசிஎண் : 0452 – 2500302, 2500303 | **வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ( வ.ஊ)**<br>**கீழப்பாவூர், ஆலங்குளம்**<br>தொலைபேசி எண்கள்:<br>கீழப்பாவூர் : 04633 – 250223<br>ஆலங்குளம் : 04633 – 270124 |

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி.

6/6